சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் நேற்று (12.05.2023) சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்,

ஆந்திராவில் 4 யானைகள் உயிரிழப்பு!

அமராவதி, மே 13 - ஆந்திர பிரதேசம் மாநிலம் பார்வதி மன்யம் மாவட்டம் காட்ரகடா பகுதியில், விளைநிலத்தில் அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கி 4 யானைகள் பரிதாபமாக உயிரிழந்தன. மின்வேலியில் சிக்கிய மேலும் 2 யானைகள் நூலிழையில் உயிர் தப்பின.

ஒடிசாவில் இருந்து வந்த 6 யானைகள் அப்பகுதியில் சுற்றித்திரிந்த நிலையில், வனத்துறை எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், யானைகளிடம் இருந்து பயிர்களை காக்க விவசாயிகள் மின்வேலி அமைத்துள்ளனர். அதிகாலை உணவு தேடி தோட்டத்துக்குள் சென்ற யானைகள் அங்கிருந்த மின்வேலிக்கு அருகே சென்றபோது மின்கம்பியில் உரசியதில், மின்சாரம் பாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தன.

இதையடுத்து சம்பவ இடத்தில் மின் இணைப்பை மின்வாரிய ஊழியர்கள் துண்டித்தனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம், எளாவூர் ஊராட்சியை சார்ந்த தே.மு.தி.க ஒன்றிய துணை செயலாளரும், ஊராட்சி வார்டு உறுப்பினருமான பழனி அக்கட்சியிலிருந்து விலகி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி. ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.முரளிதரன், வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எளாவூர் ராஜா, கழக பேச்சாளர் அத்திப்பட்டு சாமராஜ் உள்ளனர்.

திராவிட மாடல் ஆட்சியில் 76 ஆயிரம் பேருக்கு ஊதிய உயர்வு

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மின்வாரிய அதிகாரிகள் - தொழிலாளர்கள் நன்றி!

மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, மே 13 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மகிழும் வண்ணம் ஊதிய உயர்வு வழங்கிய திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு மின் கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்க வேண்டியிருந்தது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்கான குழு மட்டும் 07.12.2019 அமைக்கப்பட்டது. ஆனால் கூட்டம் ஏதும் நடைபெறவில்லை. மின்வாரியத்தில் பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வு, உள்ளிட்ட பல சலுகைகளை கடந்த அதிமுக ஆட்சி பறித்தது.

தமிழ்நாடு முதலமைச்சராக அன்புத்தளபதி அவர்கள் 07.05.2021 அன்று பொறுப்பேற்றப் போது மின்வாரியத்தின் கடும் கடன் சுமையிலும் மின்வாரிய தொழிலாளர்களுக்கு பல சலுகைகளை வழங்கினார்கள். ஊதிய உயர்வு குழுவும் மாற்றியமைக்கப்பட்டது. அதன்பிறகு மின்வாரிய தொழிற்சங்கங்களுடன் 8 முறை பேச்சு வார்த்தை நடைபெற்றது.

10.05.2023 அன்று மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மின்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 12வது ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையில் தொழிலாளர்களின் உற்ற தோழர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்களின் உத்தரவுப்படி மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி மின்வாரிய தொழிலாளர்கள் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் அனைவருக்கும்,

1.6சதவிகித ஊதிய உயர்வு, 2.12/2019 முதல் 3/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/, 3. ஊதிய உயர்வு நிலுவை தொகையை 01.04.2022 முதல் 31.05.2023 வரை கணக்கிட்டு வழங்கவும், 4. 01.12.2019 அன்று பத்து வருடங்கள் பணி முடித்த தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவீதம் எனவும் அனைவரும் மகிழும் வண்ணம் மின்துறை அமைச்சர் அறிவித்தார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் 10.02.1969ல் பொறுப்பேற்றவுடன் தொழிற்சங்கங்கள் மின்வாரிய தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும்படி கோரிக்கை வைத்தவுடன் அதனை ஏற்று 27.07.1970 அன்று எங்களைத் தம் அறைக்கே அழைத்துப் பேசி முதன்முதலில் ஊதிய உயர்வை மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கித் தொடங்கி வைத்தார்.

01.12.1996ஆம் ஆண்டு முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வைச் ஒன்றிய அரசு ஊழியர்கள் பெற்று வந்த 40 சதவிகிதத்தை மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

2006ல் ஐந்தாவது முறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, 2001 -2006 அ.தி.மு.க. ஆட்சியின் போது ஒரு ஊதிய உயர்வை இழந்த மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஈடுசெய்யும் விதமாக, 01.08.2006ல் 50 சதவிகிதம் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து, இன்னொரு ஊதிய உயர்வை போல் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கினார்கள்.

01.12.2007 முதல் கொடுக்க வேண்டிய ஊதிய உயர்வை சுமார் 40 சதவிகிதம் ஒன்றிய அரசு ஊழியர்களுக்குத் வழங்கப்பட்டதைப் போல மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் .

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தத்தின் மூலமாக முதல் ஊதிய உயர்வை வழங்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக, தலைவர் கலைஞர் அவர்களைப் போலவே தொழிலாளர்களின் உற்ற தோழனாய் இருந்து அவர்களுடைய வாழ்வு மேம்படும் வகையில் மின்வாரிய தொழிலாளர்கள் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் என சுமார் 76000 பேர்கள் மனம் மகிழும் வகையில் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும் அரசு என்பதை மீண்டும் நிரூபித்து வரலாறு காணாத ஊதிய உயர்வினை ஏற்படுத்தித் தந்த திராவிட மாடல் முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்களுக்கும், நல்லதொரு ஊதிய உயர்வினை ஏற்படுத்தித் தருவோம் என சட்டமன்றத்தில் அறிவித்தது போல அற்புதமான ஒரு ஊதிய உயர்வினை மின்வாரியத்தில் பணியாற்றும் அனைவரும் பெருமைகொள்ளும் வகையில் மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாகவும், அனைத்து மின்வாரிய தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த மனமார்ந்த நன்றியினை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும்

ரூ.20 ஆயிரம் கோடி ஜி.எஸ்.டி. வரி மோசடி!

குஜராத் மாநிலத்தில் மட்டும் 25 % கண்டுபிடிப்பு!

காந்திநகர், மே 13 - நாடு முழுவதும் 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஜி.எஸ்.டி. வரியில் மோசடி நடைபெற்றுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஜி.எஸ்.டி. மோசடியில் குஜராத் மாநிலம் மையப்புள்ளியாக இருந்துள்ளதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் ஜி.எஸ்.டி. பில்லிங்கில் மோசடி நடைபெறுவதாக எழுந்த புகாரையடுத்து கடந்த பிப்ரவரி மாதம் சூரத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில், ஜி.எஸ்.டி. அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதில், மாதவ் காப்பர் என்ற நிறுவனம் மட்டும் 739 கோடி ரூபாய் மதிப்பிலான ஜி.எஸ்.டியில் மோசடியில் ஈடுபட்டது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, அந்த நிறுவனத்தின் தலைவரான முகமது டாடா என்பவர் கைது செய்யப்பட்டு குஜராத்தின் பாவ்நகர் சிறையில் அடைக்கப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் ஜி.எஸ்.டி. மோசடி தொடர்பாக பல் வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, நாடு முழுவதும் நடைபெறும் ஜி.எஸ்.டி. மோசடியில் குஜராத் மையப்புள்ளியாக இருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஜி.எஸ்.டி. அதிகாரிகள் நடத்திய தொடர் விசாரணையில், 461 போலி நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இது தொடர்பாக 236 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அதில், 2 ஆயிரத்து 800 ஆதார் கார்டுகளுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்களை மாற்றி மோசடி திட்டத்தை அரங்கேற்றியிருப்பது தெரியவந்தது.

நாடு முழுவதும் நடைபெற்றுள்ள 20 ஆயிரம் கோடி ரூபாய், ஆதார் ஜி.எஸ்.டி. பில்லிங் மோசடியில் 25 சதவீதம் குஜராத்தில் மட்டும் நடைபெறுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அதிகாரிகள், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், டெல்லி, உத்தரப்பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் ஜி.எஸ்.டி. மோசடி சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம்

புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

நாமக்கல் கிழக்கு மாவட்டம், புதுச்சத்திரம் தெற்குஒன்றியக் கழகச் செயலாளர் துரை.இராமசாமி மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர். ஜெயபிரகாஷ்**, எம்பிஏ., (11ஏ, உடுப்பம் & அஞ்சல், நாமக்கல்வட்டம் & மாவட்டம்.) அவர்கள், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள்: 12.5.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

நெசவாளர் அணி துணை அமைப்பாளர்

புட்லூர் குணசேகரன் மறைவு!

திருத்தணி எஸ்.சந்திரன் - வி.ஜி.ராஜேந்திரன் - ஆ.கிருஷ்ணசாமி அஞ்சலி செலுத்தினர்!

திருவள்ளூர் மே 13; திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் புட்லூர் குணசேகரன் நேற்று அதிகாலை 4:30 மணி அளவில் மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார் அன்னாரின் உடல் திருவள்ளூர் அடுத்த புட்லூர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணிஎஸ். சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் விஜி. ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை அணிவித்து அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

அப்போது மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர், ஆர்.டி.இ.ஆதிசேஷன் திருவள்ளூர் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், எஸ்.மகாலிங்கம் அரிகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு த.எத்திராஜ், மற்றும் நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி.என்.ரவி, எம்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், இ.குப்பன், டி.என். ஆர்.சீனிவாசன், டி.சிவாகுமார், டி.கே.பாபு, பி.கே. நாகராஜ், ஜி.பாண்டியன், மனோகரன், கே.ஜி. ராஜேஷ், கு.பிரபாகரன், மஞ்சுளா குமார், ஆ.பவளவண்ணன், மா.கிரண், கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற உயரிய நோக்கத்துடன் திராவிடமாடல் ஆட்சி நடத்தும் முதலமைச்சர் அவர்கள் நேற்று (12.05.2023) இராயபுரம் சட்டமன்ற தொகுதி மணிகண்டன் தெரு /கல்லறை சாலையில், எல்.கே.ஜி முதல் 10 ஆம் வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில் கல்வி கற்க ஏதுவாக ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பள்ளியினை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்து சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் சென்று பள்ளியை திறந்து வைத்து மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் நிரஞ்சனா ஜெகதீஷன், வட்ட செயலாளர் என்.கண்ணன், ஆசிரியர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.கே. சுப்பையா
மே 13 (1996)



பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், 1971ஆம் ஆண்டு, சட்டப்பேரவையில் 'தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு இடங்களை, அவர்களுக்கே சொந்தமாக்கிட வேண்டும்' என முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அக்கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து 'பொதுவுடைமை இயக்கத்தில் போராடி, சாணிப் பாலுக்கும், சாட்டையடிக்கும் ஆளானோம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு துளிமையினால் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கினார் எனக்கூறி அந்த இயக்கத்திலிருந்து விலகி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டார்.

1978 முதல் 1996 வரை கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி.எஸ். ஜானகிராமன்
மே 13 (1994)

கோவை மாவட்டத்தில் கழகம் வளர்த்த தியாக சீலர். கோவை மாவட்டக் கழக அவைத்தலைவர் பொறுப்பு வகித்தவர்.

கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா அவர்களின் மறைவு கேட்டு, துடித்துப் போன அவரது பள்ளி நண்பரான ஜானகிராமன் அதிர்ச்சியில் சாதிக் வீட்டு வாசலிலேயே மயங்கி விழுந்து மரணமடைந்து, நட்புக்கு இலக்கணமாக விளங்கியவர்.

"கழகத்தின் எந்தவொரு பதவிக்காகவும், பொறுப்புக்காகவும் பிடிவாதம் பிடிக்காத கண்மணி" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.